# படைப்புலகில் காப்புரிமை

முனைவர் சி.வேல்முருகன்
பல்கலைக்கழக நூலகர் மற்றும் தலைவர்
நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்,
தமிழ்நாடு, இந்தியா.
Email: cvelmuruga72@gmail.com

## முன்னுரை

நவீன உலகில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு புதிய தொழில் நுட்பங்களும், படைப்புகளும் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இதில் தகவல் செயலாக்கமும், மீட்டெடுப்புகளும் 21 ஆம் நூற்றாண்டில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். படைப்புலகில் வெளிவரும் அனைத்து படைப்புகளும் அநேகமாக மின்னணுமயமாகிக் கொண்டிருக்கின்றன. உலகமயமாகிய இன்றைய பதிப்புலகில் படைக்கப்படும் அறிவுசார் சொத்துக்களுக்குக் காப்புரிமை என்பது மிகவும் முக்கியமானதாகும். எனவே இக்கட்டுரையில் படைப்பாளர்கள், எழுத்தாளர்கள், படைப்புலகம், நூலகம், மின் நூலகம், காப்புரிமைச் சட்டம், கருத்துக்களவு, போன்றவைகளைப் பற்றி விரிவாகக் காணலாம். எனவே, காப்புரிமைச் சட்டத்தின்படி நூல்களைப் பதிவு செய்து கொள்வது பாதுகாப்பானவையாக அமையும்.

## பதிப்பித்தல் பொருள் விளக்கம்

நீண்ட நெடிய பாரம்பரியமிக்க தமிழில் ஆராய்ச்சிகள் வளம்பெறுவதற்கு ஆறுமுகநாவலர், சி.வை.தாமோதரம் பிள்ளை, உ.வே.சாமிநாதையர் போன்றோர் பதிப்பித்து வெளியிட்ட நூல்களே அடிப்படையாகும் எனலாம். பதிப்பித்தல் என்னும் பொருள்தரும் ஆங்கிலச்சொல்லாகிய ‘edit’ என்பது edit-us என்னும் இலத்தீன் மொழி சொல்லிலிருந்து வந்ததாக ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி குறிப்பிடுகிறது. editio – onis என்னும் இலத்தீன் மொழிச் சொல்லுக்கு நூல் வெளியிடுதல் என்ற சொல்லை இலத்தீன் ஆங்கில அகராதி கூறுகின்றது (ம.சா.அறிவுடைநம்பி, 2005:ப.1).

பதிப்பித்தல் என்பது பதித்தல் எனவாகும். தமிழில் பதி-பதிப்பு- பதித்தல் பதிப்பித்தல் எனலாம். பதிப்பு என் பது அச்சிட்டு வெளியிடுதல் என்ற வரையைறக்குள் அமையாது. பதிப்பு உருவாக்கம்பெற்ற பின்னரே அச்சேற்றப்பட்டுப் பதிப்பு என்ற நிலையை அடைகிறது எனலாம். “இடம், பொருள் நோக்கிப் பதிப்புகளைப் பல வகைப்படுத்தலாம். அவற்றினை பதிப்பு நிலை, அளவு, அச்சிடப்பட்ட முறை, அமைப்பு, விலை, உள்ளடக்கம், உரிமை,வெளியீட்டு நிறுவனம், பதிப்பாசிரியர்,

வெளியாகும் காலம், இடம் என்னும் அடிப்பைடயில் பதிப்புகளைப் பாகுபாடுசெய்யலாம்” என்கிறார் சி.இலட்சுமணன்.

## பதிப்பின் வகைகள்

1.பதிப்பும் மறுபதிப்பும், 2. ஃபாசிமிலி பதிப்பு, 3. காலப்பதிப்பு. 4.சுருக்கப் பதிப்பு, 5.கையடக்கப் பதிப்பு, 6.தொகுப்புப் பதிப்பு, 7. குறிப்பெதிர் பதிப்பு, 8. தழுவல் பதிப்பு, 9. நாடகப்பதிப்பு. 10. அடிக்குறிப்புப் பதிப்பு, 11. சந்தாப் பதிப்பு, 12. அயல்நாட்டவர்க்கான பதிப்பு, 13. விலையுயர்ந்த பதிப்பும் மலிவுப் பதிப்பும், 14.பைபிள் பதிப்புகளும் பன்மொழிப் பதிப்பும், 15.உரைவளப் பதிப்பு, 16.அதிகாரப்பூர்வப் பதிப்பு, 17.கொள்ளைப் பதிப்பு என்பன போன்று பொதுவாக வகைப்படுத்துவதுண்டு. மேலும் அறிஞர்கள் கீழ்கண்டவாறு பல பொருண்மைகளில் வகைப்படுத்துவதுண்டு.

## முகப்பு பதிப்பு

முகப்பு பதிப்பு என்பது பதிப்பாசிரியரால் ஆசிரியரின் அனைத்து விவரங்களையும் உள்ளடக்கி பதிப்பாசிரியருக்கு முக்கியத்துவம் கொடுத்து அமைக்கப்பெற்ற பதிப்பாகும்.

## மூல பதிப்பு

ஒர் இலக்கியத்தின் மூலத்தை மட்டும் பதிப்பித்தலாகும்.

## மூலச் செய்தி பதிப்பு

மூலச் செய்தி பதிப்பு என்பது மூலங்களை மட்டும் பதிக்கும் பழக்கமாகும் உரைகள் இன்றி நூலின் மூலம் மட்டும் பதிப்பிக்கபட்டிருக்கும்.

## நேரடிப் பதிப்பு

நேரடிப் பதிப்பு என்பது ஓலைச்சுவடிகளில் கிடைக்கப்பெறும் செய்திகளைப் பல்வேறு சுவடிகளுடன் ஒப்பிட்டு பார்த்து பதிப்பிக்கும் முறையாகும்.

## மறுபதிப்பு

மறுபதிப்பு என்பது முன்னர் வெளியிடப்பட்ட பதிப்புகளை மீண்டும் வெளியிடுதலாகும்.

## பதிப்பும் மறுபதிப்பும்

பதிப்பு என்பது முதலில் வெளிவருவதாகும். மறுபடியும் சில கருத்துக்கள் அல்லது செய்திகள் சேர்த்து மறுமுறை வெளியிடுவது மறுபதிப்பாகும்.

## சுருக்கப் பதிப்பு

சுருக்கப் பதிப்பு என்பது மூல நூலில் இருந்து கருத்துக்களைச் சுருக்கி வெளியிடுதலாகும்.

## கையடக்கப் பதிப்பு

கையடக்க பதிப்பு என்பது ஒரு முழு வெள்ளைத் தாளினை 8 மடிப்பாக்கி மடிப்பின் ஒரு பங்கு அளவினதாக 64 x4 இருக்கும் பதிப்பாகும்.

## தொகுப்புப் பதிப்பு

தொகுப்பு பதிப்பு என்பது ஒருவர் எழுதிய படைப்புகளிலோ அல்லது பலர் எழுதிய படைப்புகளிலோ உள்ள சிறந்த பகுதிகளை எடுத்து தொகுத்து நூலாக அச்சிட்டு வெளியிடுவது தொகுப்புப் பதிப்பு என்று அழைக்கப்படுகிறது.

## குறிப்பெதிர் பதிப்பு

குறிப்பெதிர் பதிப்பு என்பது ஒரு பக்கத்தில் மூலமும் எதிர்பாக்கத்தில் குறிப்பும் அமையப்பெற்று பதிப்பித்தலாகும்.

## நாடகப் பதிப்பு

நாடகப் பதிப்பு என்பது இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட நபர்களின் உரையாடல்களின் முன் பெயர்கள் அச்சிடப்பெற்று வெளியிடுதலாகும்.

## உரைவளப் பதிப்பு

உரைவளப் பதிப்பு என்பது ஒரு நூலுக்கு பல உரையாசிரியர்களும் பதிப்பாசிரியர்களும் எழுதியுள்ள குறிப்புகளைத் தொகுத்து வெளியிடும் பதிப்பாகும்.

## அதிகாரப்பூர்வப் பதிப்பு

அதிகாரப்பூர்வப் பதிப்பு என்பது நூலாசிரியரின் ஒப்புதலோடு மறு பதிப்புச் செய்து வெளியிடுதலாகும்

## கொள்ளைப் பதிப்பு

நூலாசிரியரின் அனுமதியைப் பெறாமல் ஒருவர் வெளியிடுதல் கொள்ளைப் பதிப்பாகும்.

### மிகச்சிறிய பதிப்பு

மிகச்சிறிய பதிப்பு என்பது தீப்பெட்டி அளவு இருக்கும் பதிப்பாகும். இவ்வாறு பதிப்பியல் சார்ந்த அறிஞர்கள் பகுத்துள்ளனர்.

### படைப்புகள்

எழுத்துக்களைப் பதித்தல் என்பது கி.மு.3500- இல் சுமேரிய நாகரிகத்தில் காணப்படுகிறது. களிமண்ணிலும் கல்லிலும் எழுத்துக்களைப் பதித்தவர்கள், பின்பு மரப்பட்டைகளிலும், பட்டுத்துணிகளிலும், ஓலை நறுக்குகளிலும் எழுதத் தலைப்பட்டனர்.

ஏழாம் நூற்றாண்டில் சீனர்கள் தாளைக் கண்டுபிடித்தனர். அதன்பின், எழுத்து எளிமையானது. 15 ஆம் நூற்றாண்டில் குட்டன்பார்க் என்ற ஜெர்மனியர் அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். ஏராளமான எழுத்தாளர்கள் தங்கள் சிந்தனைகளைப் புத்தகத்தில் வடிக்கத் தொடங்கினர். இந்தப் புத்தகங்கள் ஆசிரியரின் உரிமையில்லாமல் பதிக்கப்பட்டு திருட்டுத்தனமாக வெளியிடப்படும் நிலைமை ஏற்பட்டபோது காப்புரிமையின் அவசியம் உணரப்பட்டது.

### படைப்புகளின் வகைகள்

நூல்கள், இதழ்கள், மின்னணு வடிவில் திறந்த அணுக்கச் சஞ்சிகைகள் (open access journals) திறந்த அணுக்க நூல்கள் (open access books) என்று அதிக அளவில் வெளிவந்துக் கொண்டிருக்கின்றன.

### நூலகமும் வாசகர்களும்

பதிப்புலகில் வெளிவரும் அனைத்து காலமுறைஇதழ்கள் மற்றும் புத்தகங்களை வாங்கிப்படிப்பது என்பது ஒவ்வொருவருக்கும் இயலாத காரியம். அதனால் இந்நூல்களை மாணவர்கள், ஆசிரியர்கள், ஆய்வாளர்கள், பயனாளர்கள் மற்றும் பொதுமக்கள் படிப்பதற்காகவும் ஆய்வுக்காகவும் கிடைக்கும் வகையில் நூலகத்தில் வாங்கி பயன்பாட்டிற்காகப் பாதுகாக்கப்படுகின்றன. நூலகத்திற்கு வரும் ஒருசில பயனாளர்கள் நூல்களில் உள்ள அனைத்துப் பக்கங்களையும் ஒரே நேரத்தில் மின்படியாக்கம் செய்து தர வேண்டி நூலகரிடம் கேட்கின்றார்கள். நூலகர் காப்புரிமைச்சட்டத்தின்படி மூன்றில் ஒரு பகுதியை மின்படி செய்து தரலாம் என்று கூறுகிறார். அப்போது பயனாளர்கள் ஒரு நூலை மூன்றாகப் பிரித்து ஒவ்வொருவருக்கும் ஓர் பகுதி என்று மின்படியாக்கம் செய்து தாருங்கள் என்று

கேட்கிறார்கள். சிலர் மின்படியகங்களில் முழு நூலையும் மின்படியாக்கம் செய்து விடுகிறார்கள். இப்படி சிலர் அறிந்தும் அறியாமலும் மின்படியாக்கம் செய்து மற்றவர்கள் பெயரில் அச்சிட்டு வெளியிடுகிறார்கள். இவ்வாறு மற்றவர்கள் பெயரில் அச்சிட்டு வெளியிடுவதைக் கருத்துக்களவு அல்லது கருத்துத் திருட்டு என்கிறார்கள்.

## கருத்துதக்களவு

புத்தகங்கள் ஆசிரியரின் உரிமையில்லாமல் பதிக்கப்பட்டு திருட்டுத்தனமாக வெளியிடப்படும் நிலைமை ஏற்பட்டபோது காப்புரிமையின் அவசியம் உணரப்பட்டது. இதுபோன்று கருத்துதக்களவு அல்லது கருத்துத் திருட்டு அச்சிட்டு வெளியிடும் நூல்கள், கட்டுரைகள் போன்றவற்றைப் பரிசோதிப்பதற்காகப் படைப்புலகில் பல மென்பொருள்கள் வெளிவந்துள்ளன. அவைகளில் உலகளவில் இணையவழியில் முதலிடத்திலுள்ள மென்பொருள்கள் Dupli Checker, Copyleaks, PaperRater, Plagiarisma, Plagiarism Checker, Plagium, PlagScan, PlagTracker, Quetext, Plagiarismhunt. இந்திய பல்கலைக்கழகங்களில் Urkund Ouriginal என்ற மென்பொருளினை அறிவுசார் சொத்துக்களில் கருத்துக்களவு அல்லது கருத்துத் திருட்டு கண்டுபிடிப்பதற்காகப் பயன்படுத்துகிறார்கள். இதற்காகத்தான் படைப்புலகில் படைப்பாளர்களுக்குக் காப்புரிமை தேவைப்படுகின்றன. இது நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றது.

ஒவ்வொரு படைப்பாளருக்கும் ஒவ்வொரு நாடும் கருத்துரிமை, எழுத்துரிமை கொடுத்திருக்கின்றது. இருந்தாலும் படைக்கப்பட்ட அனைத்து நூல்களும் வெளிவந்து விடுவதில்லை. உதாரணத்திற்கு காந்தியடிகள் எழுதிய இந்திய சுயராஜ்யம் என்ற நூல். இது நீண்ட போராட்டத்திற்குப் பிறகு வெளிவந்தது.

## காப்புரிமைச் சட்டம்

பதிப்புரிமை ( copyright ) சட்டத்தை ஆராய்ந்து பார்த்தால், 1436 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் மரத்தினால் செய்யப்பட்ட ஒரு அச்சக இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. இது 1440 ஆம் ஆண்டு உலோகமாக மாற்றப்பட்டது. இந்த உலோக அச்சக இயந்திரம் படைப்புலகிற்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது. அச்சக இயந்திரத்தைப் பயன்படுத்தி புத்தகங்கள், நோட்டீசுகள் இன்னும் பல காகித வடிவ ஆவணங்கள் இதில் அச்சடிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கில் அச்சடிக்கப்பட்டு மக்கள் விற்பனைக்குப் போயின. அப்போதெல்லாம் படிக்கச் வேறெந்த சாதனமும் இப்போது இருப்பது போல இல்லாததால் புத்தகங்களுக்கு மிக பெரிய வரவேற்பு இருந்தது. மதம், அரசியல் சம்பந்தப்பட்ட நூல்கள் அதிக அளவில் வெளியிட ஆரம்பித்தனர். அதனால் அரசுக்குப் பெரிய தலைவலியாக ஆரம்பித்தது. அதனால் லைசென்ஸ் முறை கொண்டு வர பட்டது. 1534 ஆம் ஆண்டு அரசின் அனுமதி பெறாமல்,

லைசென்ஸ் இல்லாமல், சென்சார் செய்யப்படாமல் நூல்கள் அச்சடித்து வெளியிட கூடாது என்று ஆணை பிறப்பித்தனர்.

## உலக அறிவுசார் சொத்துரிமை நிறுவனம் (WIPO)

படைப்புகளின் பயன்பாடு மற்றும் படைப்புகளை ஊக்கப்படுத்தவும், தொழில் முன்னேற்றத்திற்காகவும், உயர்த்துவதற்காகவும் அமைக்கப்பட்டுள்ளது. WIPO வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும், கலை உலகத்தை வளப்படுத்துவதிலும், முக்கியமான பங்கு வகிக்கின்றது, மேலும் நாடுகளுக்கு உண்மையான செல்வத்தை உருவாக்குகின்றது. ஏப்ரல் 26 ஆம் நாள் உலக அறிவுசார் சொத்துரிமை நாளாகக் அனுசரிக்கப்படுகிறது

## அறிவு சார்ந்த சொத்துரிமைகளின் வகைகள்

1. சொத்துக்கள்
   - காப்புரிமைகள் ( Patents )
   - வணிக/ வர்த்தக சின்னங்கள் / முத்திரைகள் ( Trade Marks )
   - புவியியல் பொருட்கள் குறிகாட்டிகள் (Geographical Goods Indicators )
   - வடிவமைப்புக் காப்புரிமைகள் (Design Patents )

2. பதிப்புரிமைகள் ( Copyrights )
   - இலக்கியப் படைப்புகள்
   - சேகரிப்பு அல்லது தொகுப்புப் படைப்புகள்
   - கலைப் படைப்புகள், போன்றவை

## சுதந்திரத்திற்குமுன் இந்தியாவில் காப்புரிமைச் சட்டம்

1537 ஆம் ஆண்டு பிரெஞ்சு நாட்டு அரசர் ஒரு நூலை அச்சிடுவோரோ அல்லது வெளியிடுவோரோ நூலின் ஒரு படியை ராயல் நூலகத்தில் சமர்பிக்க வேண்டும் என்றார்.

1661 ஆம் ஆண்டு அச்சக உரிமைச் சட்டத்தின்படி இங்கிலாந்து நாட்டில் படைப்பாளாரோ அல்லது அச்சிடுவோரோ மூன்று பிரதிகளை முறையே ராயல் நூலகம், ஆக்ஸ்போர்ட் நூலகம், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக நூலகம் ஆகியவற்றிற்கு வழங்க வேண்டும். அப்படி வழங்கிவிட்டால் காப்புரிமை பெற்றதாகிவிடும். இதுபோல் ஒவ்வொரு நாடும் தங்கள் தேவைக்கு ஏற்ப காப்புரிமைச் சட்டம் இயற்றிக்கொண்டனர்.

1710-இல் முதன்முறையாக பிரிட்டனில் பதிப்புரிமை சட்டம் ஏற்படுத்தப்பட்டது. இதன்படி மூல மொழியில் எழுதிய புத்தகங்களுக்கு மட்டும் காப்புரிமை தரப்பட்டது. அந்தப் புத்தகங்களின் மொழிபெயர்ப்புகளுக்குக் காப்புரிமை தரப்படவில்லை.

நாளடைவில், மொழிபெயர்ப்புகளுக்கு மட்டுமின்றி, நாடகம் உள்ளிட்ட இதர விஷயங்களுக்கும் காப்புரிமை தரப்பட்டது.

1799 ஆம் ஆண்டு வெல்லஸ்லி பிரபு அச்சக ஒழுங்குமுறை சட்டத்தைக் கொண்டு வந்தார். இச்சட்டம் காலமுறை இதழ்களுக்கு மட்டுமே இருந்தது.

1823 ஆம் ஆண்டு ஜான் ஆடம் என்பவர் இந்தியர்கள் யாரும் சொந்தமாக அச்சகம் நடத்தக்கூடாது என்றும் அரசிடம் இருந்து லைசென்ஸ் பெற்ற பிறகுதான் அச்சகம் நடத்த வேண்டும் என்றும் கூறினார். இவற்றை மீறினால் தண்டம் வசூலிக்கப்படும் என்றார்.

1835 ஆம் ஆண்டு சார்லஸ் மிட்கஃபே என்ற கவர்னர் ஜெனரல் சட்டத்தின்படி அரசுக்கு எதிரான கருத்துக்களைத் தவிர்த்து யார் வேண்டுமானாலும் அச்சகம் தொடங்கி நூல்கள் மற்றும் காலமுறைஇதழ்கள் வெளியிடலாம் என்ற அச்சகச் சட்டதைக் கொண்டுவந்தார்.

இந்தியா 1867 ஆம் ஆண்டு நூல்களைப் பதிவு செய்யும் முறையைக் கொண்டு வந்தது. 1866 ஆம் ஆண்டு பாரிசில் நடைபெற்ற பெர்ன் கன்வென்ஷன் மாநாடு உலக அளவில் புத்தகம் மற்றும் கருப்பொருள்கள் காப்புரிமை பதிவு செய்ய வேண்டும் என்ற சட்டத்தை நிறைவேற்றின.

1883 - இல் பாரீஸ் நகரில் ஏற்பட்ட சர்வதேச உடன்படிக்கையின்படி அறிவுசார் சொத்துரிமை, வணிக முத்திரை, விஞ்ஞான கண்டுபிடிப்புக்கான காப்புரிமை வரையறுக்கப்பட்டது. ஆனால், அவை அந்தந்த நாட்டிற்கு மட்டுமே பொருந்தும். அண்டை நாடுகளில் உரிமை பெறாமல் நூல்கள் விற்பனையாவதைத் தடுக்க இயலவில்லை. இதனைத் தடுக்கும் விதத்தில் சர்வதேச சட்டம் எதுவும் அப்போது இல்லை.

காப்புரிமை குறித்த சர்வதேச மாநாடு 1886 - இல் சுவிட்சர்லாந்து நாட்டில் பெர்ன் நகரில் புத்தகப் படைப்புகள் மற்றும் கலை நுட்பப் படைப்புகளுக்குச் சர்வதேச அளவில் பாதுகாப்பு அவசியம் என்பதை வலியுறுத்துவதற்காக நடத்தப்பட்டது. இதன்படி புகைப்படம், திரைப்படம் தவிர இதர படைப்புகளுக்குப் படைப்பாளியின் இறப்புக்குப்பின் 50 ஆண்டுகள் காப்புரிமை வழங்க முடிவெடுக்கப்பட்டது. வெளியிடப்படாத புத்தகங்களுக்கும் கூட காப்புரிமை உண்டு என்று அந்த மாநாடு தெரிவித்தது.

பெர்ன் உடன்படிக்கையை 1887 - இல் பிரிட்டன் ஏற்றுக்கொண்டது. முதல் காப்பிரைட் சட்டம் 1911 இல் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.. இதுதான் முதல் காப்பிரைட் சட்டம். பிரிட்டனின் காலனி ஆதிக்கத்தின் கீழ் இருந்த இந்தியாவில் 1914 -இல் காப்புரிமைச் சட்டத்தை பிரிட்டிஷ் அரசு கொண்டுவந்தது. உடன்படிக்கையை 179 நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. அதில் நம் இந்தியாவும் ஒன்று.

## சுதந்திரத்திற்குபின் இந்தியாவில் காப்புரிமைச் சட்டம்

1950 ஆம் ஆண்டு யுனெஸ்கோ பாரிசில் நடத்திய மாநாட்டில் ஒவ்வொரு நாடும் அச்சிடப்பட்ட நூல்களின் விவர நூல்பட்டியல் வெளியிட வேண்டும் என்று வலியுறுத்தியது. இத்தீர்மானத்தின்படி 1955 இல் இந்திய அரசின் மைய தகவல் நூலகம் கல்கத்தாவில் நிறுவியது.

அதன்படி நூல்கள் மற்றும் காலமுறை இதழ்கள் வழங்கும் சட்டத்தை 1954 இல் இந்திய அரசு கொண்டுவந்து 1957 - இல் காப்புரிமைச் சட்டம் இயற்றப்பட்டது. தற்போதைய நடைமுறைக்குத் தகுந்தார் போல் இச்சட்டம் 2012 வரை 12 முறை திருத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் படி இந்தியாவில் வெளியிடப்படும் ஒவ்வொரு நூலும் கீழ்க்கண்ட நூலகங்களுக்கு ஒரு பிரதியை வழங்க வேண்டும். அப்படி வழங்கும்போது நூல்களுக்குரியக் காப்புரிமை உறுதி செய்யப்படுகிறது.

1. மைய தகவல் நூலகம், கொல்கத்தா
2. புதுதில்லி பொது நூலகம், புதுதில்லி
3. டவுன்ஹால் நூலகம், மும்பை
4. கன்னிமாரா நூலகம், சென்னை.

இப்பொழுது வரைபடங்கள், ஓவியங்கள், புகைப்படங்கள், இசை, திரைப்படம், கணினி மென்பொருள்கள், அறிவியல் கண்டுபிடிப்புகள், வடிவமைப்புகள் உள்ளிட்டவற்றுக்கும் காப்புரிமை தரப்படுகிறது. இது மட்டுமின்றி புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட எந்த ஒரு தொழில்நுட்பத்திற்கும் காப்புரிமை பெறலாம். ஏற்கனவே உள்ள பொருளில் புதிய மாறுதல்கள் செய்திருந்தால் அதற்கும் காப்புரிமை பெறலாம். இவ்வாறு காப்பரிமை பெற்ற தயாரிப்பைப் பயன்படுத்தும் நிறுவனங்கள் காப்புரிமை பெற்றவர்களுக்குக் கௌரவத் தொகை (ராயல்டி) வழங்கவேண்டும்.

## படைப்புகளும் கண்டுபிடிப்புகளும்

ஆண்டுதோறும் 500,000 முதல் ஒரு மில்லியன் நூல்கள் வெளியிடப்படுகின்றன. இருப்பினும் சுயமாக வெளியிடப்பட்ட ஆசிரியர்களையும் சேர்த்தால், ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்படும் 4 மில்லியன் புதிய நூல்கள் வெளியிடப்படுகின்றன.

2010 இல், சீனா 328,387 நூல்களை வெளியிட்டது, அதில் 328,259 புதிய தலைப்புகள் மற்றும் பதிப்புகள். 2019 ஆம் ஆண்டில், உலகம் முழுவதும் மொத்தம் 1,668,333 மில்லியன் புதிய புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இப்போது அச்சிடப்பெற்ற நூல்கள் மின்னணு நூல்களாக iPad, Kindle eBooks - ல் பயன்பாடுத்தலாம்.

## ஆண்டுதோறும் வெளியிடப்படும் நூல்களின் எண்ணிக்கை

2013 ஆம் ஆண்டு அமெரிக்கா மற்றும் சீனா வெளியிட்ட தரவுகளோடு மற்ற நாடுகளின் 2018-2020 ஆம் ஆண்டு வெளியிடப்பெற்ற தரவுகளுடன் ஒப்பிடுகையில், அமெரிக்காவும் சீனாவும் ஆண்டுக்கு மற்ற எந்த நாட்டையும் விட அதிகமான புத்தகங்களை வெளியிடுகின்றன.

| Rank | Country | Year | Titles |
|---|---|---|---|
| 1 | United States | 2013 | 275,232 |
| 2 | China | 2013 | 208,418 |
| 3 | United Kingdom | 2018 | 188,000 |
| 4 | Japan | 2017 | 139,078 |
| 128 | Indonesia | 2020 | 135,081 |
| 5 | Russia | 2019 | 115,171 |
| 7 | France | 2018 | 106,799 |
| 6 | Iran | 2018 | 102,691 |
| 8 | India | 2013 | 90,000 |
| 9 | Spain | 2017 | 89,962 |
| 10 | Germany | 2018 | 79,916 |

(Source Reference:https://wordsrated.com/number-of-books-published-per-year-2021/)

தமிழகத்தில் 500-க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் உள்ளன. ஆண்டுக்கு 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பொறியியல் கண்டுபிடிப்புகளைத் தங்களது துறைகளில் மேற்கொள்கின்றனர். இவற்றைப் பதிவு செய்து காப்புரிமை பெற்றால், அந்த தயாரிப்பால் பயன் பெறும் நிறுவனங்கள் அதற்கு ராயல்டி தொகை அளிக்கும். இதன் மூலம் கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் பயனைடையும். வெளிநாடுகளில் காப்புரிமை பெறும் எண்ணிக்கை அதிகமாக இருப்பதற்கு இதுவே காரணம். இந்தியாவிலும் இந்த நடைமுறை வந்தால் காப்புரிமை பெறுவது அதிகரிக்கும். நமது தயாரிப்புகளுக்கும் சர்வதேச அங்கீகாரம் எளிதில் கிடைக்கும்.

## மின்னணு நூல்கள்

2020 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் 191 மில்லியன் மின்புத்தகங்கள் விற்கப்பட்டதாகவும், 2019 ஆம் ஆண்டில் $983 மில்லியனில் இருந்து 2020 ஆம் ஆண்டில் $1.1 பில்லியன் விற்பனை செய்ததாகவும் புள்ளியியல் விவரம் தெரிவிக்கின்றன. இ-புத்தகங்களுக்கான மிகப்பெரிய சந்தையாக அமேசான் உள்ளது, அதைத் தொடர்ந்து ஆப்பிள் இ-புக் ஸ்டோர் உள்ளது. இ-புத்தகங்கள் இன்னும் வலுவான சந்தையாக உள்ளன மற்றும் வெளியீட்டு வருவாய் 2025 ஆம் ஆண்டளவில் $7 பில்லியன்களை எட்டும் என்று கணிக்கப்பெற்றுள்ளது.

## பாதுகாப்பு

காப்புரிமை ஒரு படைப்பாளியின் உரிமைகளைப் இரண்டு விதங்களில் பாதுகாக்கிறது.

1. படைப்பாளியின் படைப்பு மூலம் கிடைக்கும் பொருளாதார ரீதியான உரிமையை நிலைநாட்டுகிறது.
2. ஒருவரது படைப்பினை, வேறு ஒருவர் தனதாக்கிக் கொள்வதைத் தடுக்கிறது.

காப்புரிமை மூலம் ஒரு படைப்பாளி தனது படைப்பினை மறுபதிப்பு செய்யவும், நகலிடவும், மொழிபெயர்த்து வெளியிடவுமான உரிமைப் பெறுகிறார். ஒருவரது படைப்பினை அவருடைய அனுமதி இன்றி பிறர் பயன்படுத்துவதைச் சட்டபூர்வமாகத் தடுக்க படைப்பாளிக்குக் காப்புரிமை உரிமை வழிவகைச் செய்கிறது. காப்புரிமையை மீறுபவர்களுக்கு மூன்று ஆண்டு வரை சிறைத் தண்டனையும், 2 லட்சம் வரை அவதாரமும் வழங்கிட காப்புரிமைச் சட்டம் வழிவகைச் செய்கிறது.

ஒருவரது படைப்பினை இன்னொருவர் தனது ஆய்வுக்காகவும் தனது சொந்த உபயோகத்திற்காகவும் பயன்படுத்திக் கொள்ளலாம். அந்த படைப்பினை விமர்சிப்பதும் மீளாய்வு செய்வதும் காப்புரிமைச் சட்டத்தின் விதிவிலக்குகளாகும். ஒரு படைப்பினைக்

காப்புரிமை சட்டப்படி பதிவு செய்ய வேண்டியது கட்டாயமில்லை. ஒரு படைப்பு முழுமையடைந்தவுடன் அதற்கு இயல்பாகவே பெர்ன் உடன்படிக்கையின்படி காப்புரிமை கிடைத்து விடுகிறது.

## காப்புரிமை பதிவு

காப்புரிமையைப் பதிவு செய்ய தில்லி, கொல்கத்தா, மும்பை, சென்னை ஆகிய நகரங்களில் அலுவலகங்கள் உள்ளன. சர்வதேச அளவில் ஒப்பிடும்போது இந்தியாவில் கண்டுபிடிப்புகள் மிகக் குறைந்த அளவே. 138 கோடி மக்கள் வாழும் நம் தேசத்தில், வருடத்தில் சுமார் 12,000 படைப்புகள் மட்டுமே காப்பரிமை பெறுகின்றன. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக 0.7 சதவீத தொகை மட்டுமே இந்தியா செலவிடுகிறது. இந்தியாவில் விண்ணப்பிக்கப்படும் 80% காப்புரிமை விண்ணப்பங்கள் வெளிநாட்டினருடையதாகவே இருக்கிறது.

இந்த நிலை மாற வேண்டும். காப்புரிமை காலத்தின் கட்டாயம் என்பதை படைப்பாளிகள் அனைவரும் உணர வேண்டும் .

## இணையத்தில் காப்புரிமை

காப்புரிமையைப் பதிவு செய்ய இணையத்தில் வழிவகையுண்டு, 1990 இல் இந்தியாவில் தாராளமயக் கொள்கை வந்த பிறகு பிறிதொரு படைப்பாளியின் கருத்துக்களையும், கண்டுபிடிப்புகளையும் எளிதில் தனதாக்கிக் கொள்ள இந்த கணினி யுகத்தில் வாய்ப்பு இருக்கிறது. ஆராய்ச்சி மாணவர்கள் தங்கள் ஆய்வுகளையும் கண்டுபிடிப்புகளையும் பத்திரப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர். எனவே காப்புரிமைச் சட்டம் மட்டுமல்லாது கணினி மூலம் ஏற்படும் உரிமை மீறல்களைத் தவிர்க்க தகவல் தொழில்நுட்ப சட்டம் 2000 இயற்றப்பட்டு சைபர் பாதுகாப்பு என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## ஆயுட்காலம்

வடிவமைப்பின் காப்புரிமை ஒரு பொருளுக்கு 20 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. காப்பரிமைச்சட்டத்தின்படி ஒரு நூலின் உரிமைக்கான ஆயுட்காலம் நூலை படைத்தப் படைப்பாளர் இறந்தபின் 60 ஆண்டுகள் வரை படைப்பாளரையே சாரும். இதன் மூலம் படைப்பாளியின் வாரிசுகளுக்கும் பலன் கிடைக்கும். இன்று முதல் பதிப்பு வெளியான வருடத்தில் இருந்து 60 ஆண்டுகள் என்று கணக்கிடப்பட்டு அனேக நூல்கள் மின்படியாக்கம்செய்து இணைய வழியில் வெளியிட்டுக் கொண்டிருப்பதை ஆய்வுக்கு உட்படுத்துவது அறிவுலகில் இன்றியமையாததாகும்.

## முடிவுரை

காப்புரிமைச் சட்டத்தின்படி ஒவ்வொரு நாடும் அச்சிட்டும் நூல்கள், புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் இரகசியத்தைப் பேணுதல் ஆகியவைப் பிரதான காரணிகளாகக் கருதப்படுகின்றன. ஒவ்வொரு நாடும் அச்சிட்டு வெளியிடும் நூல்களைப் பதிவு செய்து நூல்கள் விவரணப் பட்டியலை வெளியிட வேண்டும். இதன் மூலம் காப்புரிமைச் சட்டத்தை மீறுபவர்களைக் கண்டுப்பிடித்து தடுக்க உதவும். இதுவே நன்கு வலுப்படுத்தப்பட்ட அறிவுசார் சொத்து பாதுகாப்பு என்பது நாடுகளின் வெற்றிக்கும், படைப்பாளர்களுக்கும் இன்றியமையாததாக அமையும்.

## சான்றெண் விளக்கம்


1. கலைவேந்தன்,க (2022), இரட்டைக்காப்பியப் பதிப்பும் வரலாறும் வதிப்பு முறைகளும், ஆய்வேடு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
2. சுந்தர் கணேசன் (2010), பதிப்பு – காப்பு உரிமை, புத்தகம் பேசுது, சிறப்பு மலர்.
3. இலட்சுமணன், சி (2004),பேராசிரியர் மு.சண்முகம் பிள்ளையின் பதிப்புப்பணி, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை.
4. ஜெயமோகன் (2016) புலம்பெயர்ந்த படைப்புலகில் ஒரு புதியமுகம் (விமர்சனம்). 30 மார்ச் 2016
5. ராஜா, ஆ. **வேல்முருகன், சி. & ஆதித்தன், த (2021).** அச்சுக்கலை வரலாற்றில் தரங்கம்பாடி(Achukkalai Varalatril Tharangambadi), அரிமா நோக்கு (Arima Nokku), Vol. 15, 3rd October, 2021.
6. தலையங்கம், கவலை தரும் கருத்து திருட்டு, தினமணி வெளியீடு, நாள்: 3 ஏப்ரல் 2012
7. அறிவுடைநம்பி,ம.சா (2005), *பதிப்புச் சிந்தனைகள்*, ராஜ ராஜேஸ்வரி புத்தகலாயம், வடபழனி, சென்னை.
8. https://www.hindutamil.in/news/supplements/vaniga-veethi/25361-.html
9. http://www.aasi-kantharajah.com, **கந்தராஜா, ஆசி (2002) 'பாவனை பேசலன்றி' சிறுகதை தொகுதிபற்றி 'சொல் புதிது'** ஜெயமோகன் 2002 ம் ஆண்டு எழுதிய விமர்சனம்.)
10. https://geotamil.com/index.php/2021-02-10-13-39-56/3254-2016-03-30-23-22-25
11. https://tamil.indianexpress.com/opinion/copyright-act-and-cinema-phase-shankar-krishnamurthy-169583/ viewed on 15.01.2022

12. https://www.dinamani.com/editorial-articles/center-page-articles/2021/படைப்பாளி உரிமை காக்கும் காப்புரிமை, டி ஏ பிரபாகர் published on 26 ஏப்ரல் 2021
13. https://tamil.indianexpress.com/opinion/copyright-act-and-cinema-phase-shankar-krishnamurthy-169583/ viewed on 15.01.2022
14. https://www.tagari.com/how-many-books-published-each-day
15. https://www.tonerbuzz.com/blog/how-many-books-are-published-each-year/
16. https://wordsrated.com › number-of-books-published-per-... Number of books published per year [2023] - WordsRated